## கழக மறுசீரமைப்பு

# தலைமைக் கழகப் பிரதிநிதிகள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**சென்னை, செப்.03–**

**கழக மறுசீரமைப்பு பிரதிநிதிகள் குறித்து (31.08.2026) அன்று தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:**

கழக தலைமைச் செயற்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி, கழகத் தலைவர் அவர்கள் 110 கழக மாவட்டங்களை அறிவித்துள்ளார்.

கழக சீரமைப்புக்குழு வகுத்துத் தந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்ட - கிளைக் கழகங்களை மறுசீரமைத்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியை நேரடியாக மேற்பார்வையிடுவதற்காக ஒரு வருவாய் மாவட்டத்திற்கு இருவர் வீதம் 76 தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் நடத்தும் மாவட்டச் செயற்குழு கூட்டங்கள் அனைத்தும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடத்தப்படவேண்டும். பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்ட - கிளைக் கழகங்கள் மறுசீரமைப்பில் ஏதேனும் கருத்துகள், மாறுபாடுகள் இருப்பின் கழகத்தினர் தமது மாவட்டத்திற்குரிய தலைமைக் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கலாம்.

மாவட்டச் செயற்குழுக் கூட்டம் சட்டப்பேரவை நடைபெறாத நாட்களில் நடத்தும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | மாவட்டம் | தலைமைக் கழக பிரதிநிதிகள் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | திரு. அன்னியூர் சிவா |
| | | திரு. ப. அப்துல் மாலிக் |
| 2 | சென்னை | திரு. பேரா. ஜெ. காண்ஸ்டண்டைன் ரவீந்திரன் எம்.பி. |
| | | திரு. ஆஸ்டின் எம்.எல்.ஏ |
| 3 | செங்கல்பட்டு | திரு. அண்ணாதுரை எம்.பி |
| | | திரு. கோவி.லெனின் |
| 4 | காஞ்சிபுரம் | திரு. என். மருது கணேஷ் |
| | | திருமதி. கே. ராணி ரவிச்சந்திரன் |
| 5 | ராணிப்பேட்டை | திரு. டி.செங்குட்டுவன் |
| | | வழக்கறிஞர் திரு. அ. சரவணன் |
| 6 | வேலூர் | திரு. இ.கருணாநிதி |
| | | திரு. ப. தாயகம் கவி |
| 7 | திருப்பத்தூர் | திரு. வே. கௌதமன் |
| | | வி.மு.விஜய கதிரவன் |
| 8 | திருவண்ணாமலை | திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் |
| | | டாக்டர் பி.எம். யாழினி |
| 9 | விழுப்புரம் | புதுச்சேரி திரு. சிவா |
| | | திருமதி. ஜெ.வீரமணி |
| 10 | கள்ளக்குறிச்சி | திரு .ஆர். டிஅரசு |
| | | திரு. கே.பி.சங்கர் |
| 11 | கிருஷ்ணகிரி | திரு. ஆ.கிருஷ்ணசாமி |
| | | திருமதி.நாமக்கல் ப. ராணி |
| 12 | தருமபுரி | திரு. பார் இளங்கோவன் |
| | | திரு. ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., |
| 13 | சேலம் | திரு. இரா. கிரிராஜன் |
| | | திரு. அழகிரி சதாசிவம் |
| 14 | நாமக்கல் | டாக்டர் ஆர். கோகுல்கிருபாசங்கர் |
| | | திரு. திருப்பத்தூர் நல்லதம்பி |
| 15 | ஈரோடு | திரு. சபாபதி மோகன் |
| | | திரு. உடுமலை ஜெயகுமார் எம்.எல்.ஏ., |
| 16 | திருப்பூர் | திரு. வி.சி.சந்திரகுமார் |
| | | திரு. இசை |
| 17 | நீலகிரி | திரு. கே.ஈ.பிரகாஷ் |
| | | வழக்கறிஞர் திரு. இரா. ராஜீவ்காந்தி |
| 18 | கோயமுத்தூர் | திரு. எஸ்.ஆர்.பார்த்திபன் |
| | | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| 19 | கரூர் | திரு. தி.அ. முகம்மது சகி |
| | | திரு. பெரம்பலூர் பிரபாகரன் |
| 20 | திருச்சிராப்பள்ளி | திரு. வ.வேலுசாமி |
| | | திரு. வேடசந்தூர் சாமிநாதன் எம்.எல்.ஏ., |
| 21 | பெரம்பலூர் | திருமதி. அஞ்சுகம் பூபதி |
| | | திரு. முத்துவேல் ராமசாமி |
| 22 | அரியலூர் | திரு. சபா ராஜேந்திரன் |
| | | திரு. அம்பேத்குமார் எம்.எல்.ஏ., |
| 23 | கடலூர் | திரு. கலாநிதி வீராசாமி எம்.பி., |
| | | திரு. பரிதி இளம்சுருதி |
| 24 | மயிலாடுதுறை | திரு. கோவி.செழியன் |
| | | திரு. துரை கி சரவணன் |
| 25 | நாகப்பட்டினம் | திரு. பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ., |
| | | திரு. இளமகிழன் |
| 26 | தஞ்சாவூர் | திரு. ஜி.பி.ராஜா |
| | | திருமதி. மாலதி நாராயணசாமி |
| 27 | திருவாரூர் | திரு. இள.புகழேந்தி |
| | | திரு. தமிழன் பிரசன்னா |
| 28 | புதுக்கோட்டை | திரு. ஏ.கே.எஸ்.விஜயன் |
| | | திரு. மதுரை பாலா |
| 29 | திண்டுக்கல் | திரு. செல்வம் எம்.பி |
| | | திரு. பிரபு கஜேந்திரன் |
| 30 | சிவகங்கை | திரு. இளையராஜா (இளைஞரணி) |
| | | திரு. தங்கபாண்டியன் (ராஜபாளையம்) |
| 31 | மதுரை | பி.டி.சி. செல்வராஜ் |
| | | வழக்கறிஞர் திரு. ரவீந்திரன் |
| 32 | தேனி | திரு. சுபா சந்திரசேகர் |
| | | திரு. கவிஞர் காசி முத்துமாணிக்கம் |
| 33 | விருதுநகர் | திரு. கலை கதிரவன் எம்.எல்.ஏ., |
| | | திரு. இன்பா ரகு |
| 34 | இராமநாதபுரம் | திருமதி. ஹெலன் டேவிட்சன் |
| | | திரு. ஜெகன் பெரியசாமி |
| 35 | தூத்துக்குடி | திரு. நல்ல சேதுபதி |
| | | திரு. தமிழ் கா.அமுதரசன் |
| 36 | திருநெல்வேலி | திரு. முத்துராஜா எம்.எல்.ஏ., |
| | | திரு. ஜோயல் |
| 37 | தென்காசி | திரு. ஞானதிரவியம் |
| | | திரு. வ.து.ந.ஆனந்த் |
| 38 | கன்னியாகுமரி | திரு. மார்கண்டேயன் எம்.எல்.ஏ., |
| | | திரு. என். மாலைராஜா |

இவ்வாறு தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், மேல்புறம் தெற்கு ஒன்றியம், துருத்தியாரவிளையைச் சேர்ந்த ஏ.அருள்சங்கர், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 1,000ஐ தாண்டியது!

காத்மாண்டு,ஆக.3–

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,000ஐ தாண்டி உள்ளது. 4,400 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. நேபாளத்தில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட வீரர்கள் இரவு, பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு நேற்று 7வது நாளாக மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்றது. இதுவரை 1,000க்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 4,400க்கும் மேற்பட்டோரை காணவில்லை. இதில் 583 பேர் வெளிநாட்டினர் ஆவர். அவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள் ஆவர். காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பெருவெள்ளம் பாதித்த பகுதிகளில் சுமார் 40க்கும் மேற்பட்ட பாலங்கள் உடைந்துள்ளன. அங்கு தற்காலிக பாலங்களை அமைக்க இந்தியாவின் உதவியை நேபாள அரசு கோரியுள்ளது. இந்திய பொறியாளர்கள் குழு நேபாளத்தில் முகாமிட்டு தற்காலிக பாலங்களை அமைத்து வருகிறது. மேலும் நேபாளத்தின் நீர்மின் திட்டங்களில் பணியாற்றிய சுமார் 900 தொழிலாளர்களை காணவில்லை.

இரு இந்தியக் குழுக்கள் நேபாளத்தில் முகாமிட்டு சுரங்க மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. நேபாள வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் காத்மாண்டுவில் நேற்று கூறும்போது, "பெருவெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து 11,800 பேரை பத்திரமாக மீட்டு உள்ளோம். 4,400க்கும் மேற்பட்டோரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மரபணு சோதனை மூலம் உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்படுகின்றன. இந்த பணிக்கு இந்தியா, சீனா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகள் உதவி செய்து வருகின்றன என்று தெரிவித்தார்.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, இ.வேலாயுதம் (எ) இ.வி.கதிரவன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.